# செய்தித்தாளின் பங்கு

செய்தித்தாள் என்பது ஒவ்வொரு நாளும் அச்சிட்டு வெளியிடப்படும் (1) **செய்தி இதழ்** ஆகும். இந்தச் செய்தித்தாள் உலகில் முதலில் (2) **வெனிஸ், இத்தாலி** நகரில் தோற்றம் கண்டது. உலகில் நடக்கும் செய்திகளைத் தாங்கி வருவதால் இதற்குச் (3) **செய்தித்தாள்**என்ற பெயர் வழங்கப்பெற்றது. மேலும், ஒவ்வொருநாளும் நம்மைச் சுற்றி நடக்கும் விடயங்களை உடனுக்குடன் சுடச்சுடச் தகவல்களாகத் தருவதால் இதற்கு (4) **நாளிதழ்** என்ற பெயரும் உண்டு.

இந்தச் செய்தித்தாள் நான்கு திசைகளிலும் உள்ள பல நாடுகளில் (5) **நடப்பனவற்றை** செய்தியாகத் தாங்கி மலர்கின்றது. இது நாளடைவில் வார, மாத (6) **இதழாகவும்** மலரத் தொடங்கிற்று. தொடக்கக் காலத்தில் செய்திகள் கருப்பு வெள்ளை நிறத்திலேயே வெளிவந்தன. தொழில்நுட்பத்தின் வளர்ச்சி (7) **பத்திரிக்கை** வானிலும் விரிந்தது. நாளடைவில் (8) **வண்ணப் படங்களும்** மக்களின் எண்ணங்களையும் தாங்கி வெளிவரத் தொடங்கிற்று.(9) **வாசகரின்** ஆளுமையையும் திறமையையும் வெளிக்கொணரும் வகையில் பொது மக்களின் படைப்பையும் வரவேற்றது செய்தித்தாள்.

தற்போது உள்ள செய்தித்தாள்கள் உலக அரசியல், நாட்டு நடப்பு, குற்றவியல், விளையாட்டு, பொருளாதாரம், கலை உலகம் எனப் பல பக்கங்களில் (10) **செய்திகளை** வழங்கி வருகின்றன. வாசகர்கள் தங்களுக்கு வேண்டிய (11) **தகவல்களை** அறிய செய்தித்தாள் ஒரு சிறந்த (12) **தகவல்மூலமாக** விளங்குகின்றது என்றால் மிகையில்லை.

செய்தித்தாள் ஒரு சிறந்த இலக்கிய (13) **ஊடகமாவும்** விளங்குகின்றது. காரணம், இதில் அவ்வப்போது எழுத்தாளர்களின் (14) **படைப்புகளும்** வருவதுண்டு. கவிதை, சிறப்புக் கட்டுரை, சிறுகதை எனப் பல படைப்புகள் இதில் அடங்கும். மேலும், (15) **சிறப்பிடங்கள்** பற்றிய குறிப்புகளும் இடம்பெற்று மக்களின் (16) **மனத்தைக்** காட்டும் கண்ணாடியாய் விளங்குகின்றது செய்தித்தாள்.

மேலும், விளையாட்டு (17) **ஆர்வலர்களின்** தேடலுக்குத் தீனி போடும் வகையில் விளையாட்டுச் செய்திகளும் இதில் உண்டு. இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு (18) **விளம்பரங்களையும்** செய்தித்தாளில் நிறைய காணலாம். அதுமட்டுமல்லாமல் மாணவர்கள் பயன்பெறும் வண்ணம் (19) **தேர்வு வழிகாட்டி** பயிற்சிகளையும் செய்தித்தாள்கள் வெளியிடுவதுண்டு.

பலதரப்பட்ட மக்களும் வாசித்துப் பயன்பெறவும் செய்திகளை அறியவும் இந்தச் செய்தித்தாள் சிறந்த ஊடகமாகப் பணியாற்றுகின்றது. (20) **தெளிவான**, சுருக்கமான தகவல்களைத் தாங்கி மக்களின் தேவைக்கேற்ப செய்தித்தாள்கள் மலர்கின்றன. செய்தித்தாள்களின் பயன்கள் அளப்பரியவை; வாசித்துப் பயன்பெறுவோம்.

LIVEWORKSHEETS